**நீங்கள் பிரச்சனைகளுக்கு உள்ளாகினால் உங்களுக்கு உதவி செய்வதற்கு ஸ்தாபனங்கள் காத்திருக்கின்றன. அவர்களின் விபரங்கள் பின்வருமாறு.**

Stichting Religieuzen
Tegen Vrouwenhandel

Sint Janssingel 92
NL 5211 DA Den Bosch
Nederland
T: 073 – 692 13 51 / 692 13 52
F: 073 – 692 13 50
E-mail : srtv@srtv.info
Website: www.srtv.info
Bankgiro: 420557 t.n.v. SRTV

**உங்களுக்கு ஜெர்மனியில் உதவி தேவைப்பட்டால்:**

Solwodi (Solidarity with women
in Distress)

Probstei-Strasse 2
D- 54154 Boppard Hirzenach
Duitsland
Tel: 00 49 67 41 22 32
Fax: 00 49 67 41 23 10
E-mail: solwodi@t-oneline.de
Internet:www.solwodi.de



# ஐரோப்பா ஒரு சொர்க்கமா?



# எல்லா கதைகளையும் நம்பாதீர்கள்!

Tamil

Stichting
Religieuzen
Tegen
Vrouwenhandel

# பெண்களுக்கு எச்சரிக்கை!

**ஐரொப்பாவிற்கு வருவதால்
உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம்
காத்திருக்கிறது என்று யாராவது
உங்களுக்கு ஆசைவார்த்தை
காட்டினார்களா?**



**வளர்ந்து வரும் நாடுகளிலிருந்து மற்றும்
கிழக்கு ஐரொப்பா
நாடுகளில் இருந்து
ஐரொப்பாவிற்கு வரும்
பெண்களுக்கு இங்கு வருவதால் ஏற்படக்கூடிய
ஆபத்துக்களை
எடுத்து சொல்லி எச்சரிக்கை செய்வதற்காக
தயாரிக்கப்பட்ட துண்டுபிரசுரம் இதுவாகும்.**

## இது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம்

உங்களைப்போல பல பெண்கள் கனவு காண்கிறார்கள்.

**மரியா**

மரியா ஒரு ஏழைப்பெண். நாளாந்த வாழ்க்கையை கொண்டு செலுத்துவதற்காக ஒரு சிறிதளவு பணத்தை உழைப்பதற்கு கடுமையாக போராடிக்கொண்டிருந்தவள். இப்பொழுது இருக்கும் வாழ்க்கையை விட ஒரு நல்ல வாழ்க்கை வரும் என்ற நம்பிக்கையை இழக்க விரும்பாமல் வாழ்ந்து வந்தவள். அதனால் ஒரு நாள் ஒரு சந்தர்ப்பம் வந்த போது அதை பயன்படுத்திக்- கொள்ள விரும்பினாள். வேலை எடுத்துதரும் தரகரிடம் மேற்கு ஐரொப்பாவில் நல்ல சம்பளத்துடன் ஒரு நல்ல வேலை எடுத்து தருவார் என்ற ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டாள். இவ்வாறு செய்வதால் இப்பொழுதுள்ள கடினமான வாழ்விலிருந்து தப்பலாம் என்று அந்த பாரம்பரிய நடனமாடும் நாட்டியக்காரி எண்ணினாள். அவள் நெதர்லாந்தில் வந்து இறங்கிய பின்புதான் தெரிந்தது அவள் கண்ட கனவு கலைந்துவிட்டதென்று, அவள் ஏமாற்றுபட்டுவிட்டாள் என்று. அவளுக்கு சத்தியம் செய்யப்பட்டதுபோல் ஒரு நல்ல வேலை கிடைப்பதற்கு பதிலாக அவள் விபச்சார விடுதியில் விபச்சாரியாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டாள்.

**தெரேசா**

தெரேசா தன்னை ஒரு பேனாநன்பர்களை பதிவு செய்யும் கிளப்பில் பதிவு செய்துகொண்டாள். அதன்முலமாக ஒரு பணக்கார கணவனை பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பினாள். அவளது பேனா நண்பரும் அவளை ஜெர்மனிக்கு அழைத்தார். அவள் ஜெர்மனிக்கு வந்து பார்த்தபொழுதுதான் அவள் ஏமாற்றுப்பட்டதை உணர்ந்தாள். அவளது எதிர்காலக்கணவர் வயதுபோனவர் மட்டுமல்லாமல் ஒரு பெரிய குடிகாரனாயும் இருந்தார்.

**லிற்ரா**

ஒரு பெல்ஜிய நாட்டு உல்லாச பிரயாணி லிற்ராவிடம் சத்தியம் செய்தார் லிற்ரா பெல்ஜியம் வந்தால் தான் அங்கு அவளுக்கு அவரது விடுதியில் தனது செயலாளராக வேலைக்கு அமர்த்துவதாக. ஆனால் அவள் பெல்ஜியம் வந்து சேர்ந்ததும் அவளின் கடவுச்சீட்டை பறித்துவிட்டு அவளை விபச்சாரத்தில் ஈடுபடவைத்தார்.

**இந்த துண்டுபிரசுரம் தந்தவரிடம்
மேலதிக தகவல்களையும் உதவிகளையும் கேட்டு
பெற்றுக்கொள்ளுங்கள்!**

## ஏன் இந்த எச்சரிக்கை?

எல்லா மேற்கு ஐரொப்பா நாடுகளிலும் மிகவும் கடுமையான ஏமாற்றப்பட்ட சூழ்நிலையில் வாழும் எண்ணிலடங்காத

வெளிநாட்டுப்பெண்களை, இளம் பெண்பிள்ளைகளை நாங்கள் சந்திக்ககூடியதாயிருக்கிறது.

அவர்களுக்கு சத்தியம் செய்யப்பட்ட விடயங்கள்

- ஒரு நல்ல தொழில்
- ஒரு உயர்வான சம்பளம்
- ஒரு சந்தோசமான திருமணவாழ்க்கை
- இன்னும் பல பல ...

இவ் அப்பாவிப் பெண்கள் நம்புகிறார்கள் அவர்கள் குறுகிய காலத்தில் பணக்காரர்கள் ஆகிவிடலாம் என்று. அவ்வாறு ஆகிவிட்டால் தாங்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பிச்சென்று அங்குள்ள அவர்களது ஏழைக்- குடும்பத்தினருக்கு உதவி செய்யலாம் என்று நினைக்கிறார்கள்.

## ஆனால் எது அனேகமாக நிஜமாகவிருக்கிறது?

1. மேற்கு ஐரொப்பாவில் வேலையில்லாதோர் தொகை அதிகரித்து வருவதால் இங்கு வேலை கிடைப்பது கடினமான விடயமாகும்.
2. வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரமும், ஒரு நாட்டில் நுழைவதற்கான, இருப்பதற்கான அனுமதிப்பத்திரங்களும் தேவைப்படும். இவைகள் இல்லாத பட்க்ஷத்தில் உங்களை உங்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படும் அபாய சூழ்நிலை ஏற்படும்.
3. பல பெண்களுக்கு அவர்கள் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. அனேகமானோர் விபச்சாரதொழில் செய்யும் சூழ்நிலைக்குள்ளாகிறார்கள்.
4. பல பொய்யான சத்தியங்கள் செய்யப்படுகின்றன. சேய்யப்பட்ட சத்தியங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. அதனால் மிகவும் கவனமாகவிருக்கவும

**ஏல்லா பத்திரங்களும் உண்மையானதா,
உத்தியோகபூர்வமாக எடுக்கப்பட்டதா என
உறுதிபடுத்திகொள்ளவும்.**

## நிலைமை இவ்வாறிருந்தும் நீங்கள் இவ்வாறான முயற்ச்சியில் ஈடுபட விரும்பினால்..

1. உங்களை வெளிநாட்டிற்கு அனுப்ப உதவி செய்யும் தரகர்களின் பெயர் விலாசங்களை அறிந்து அவை உண்மையானவையா, அவர்கள் சட்டபூர்வமாக இயங்குகிறார்களா என தீர விசாரித்தறியவும்.

2. நீங்கள் போகவிருக்கும் நாட்டின் தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டு நீங்கள் வேலை செய்யவிருக்கும் ஸ்தாபனம், தொழிற்சாலை உண்மையாகவே அந்நாட்டில் ஊள்ளதா, அவர்கள் நம்பிக்கையானவர்களா என தீர விசாரித்தறியவும்.

3. உங்கள் நாட்டிலுள்ள குடிபெயர்ந்து செல்பவர்களுக்கு உதவி செய்யும் ஸ்தாபனர்களுடன் தொடர்பு கொள்ளவும். போதியளவு தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும். நீங்கள்திரும்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் அவர்களின் உதவி உங்களுக்கு நிச்சயம் தேவைப்படும்.

4. உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு, நண்பர்களுக்கு நீங்கள் எப்பொழுது பிரயாணம் செய்யவுள்ளீர்கள், உங்கள் எதிர்கால விலாசம், உங்களுடன் சேர்ந்து பிரயாணம் செய்பவர்களின் பெயர், விலாசங்கள் போன்ற விபரங்களைக் கொடுத்து வைப்பதுடன் அண்மையில் எடுத்த உங்கள் புகைப்படம் ஒன்றையும் கொடுத்து வைக்கவும்.

**உங்கள் கடவுச்சீட்டு உங்களுக்கே
சொந்தமானது!**

5. நீங்கள் பிரச்சனைக்குள்ளாகினால் உடனடியாக ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளவும். சர்வதெசச்சட்டப்படி எந்தவித கட்டணமும் செலுத்தாமல் ஒரு சட்டத்தரனியின் உதவியை பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு.

6. சில நாடுகளில் சட்ட விரோதமாக பெண்களை வைத்து உழைக்கும் கூட்டத்தைப் பிடிப்பதற்கு பொலிசாரும் உதவி செய்கிறார்கள். உங்களிடம் எவ்வித சட்டபூர்வமான பத்திரங்களும் இல்லாமல் இருந்தாலும் கூட அவர்கள்உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**உங்கள் கடவுச்சீட்டை யாரிடமும்
கொடுக்கவேண்டாம்!**